Nallur Branch

## ★ காங்கேசன் கடலில் கண்ணிவெடி; 'சீ-டான்சர்' தகர்ந்தது!

விலை ரூபா 5. 00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 22 இதழ் 121
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 05 - 6 - 1995

## தற்செயல் விபத்தாம்

(கொழும்பு)

வடபகுதிக்கு உணவுப் பொருட்களையும், பயணிகளையும் ஏற்றி இறக்கும் 'சீ-டான்சர்' என்ற சரக்குக் கப்பல் நேற்று மாலை நாலு மணியளவில் காங்கேசன் துறை கடற்பரப்பில் கடற் கண்ணி வெடியில் சிக்கி தகர்ந்ததாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மிகப்பெரிய இழுவைபடகான 'சீடான்சர்' சாவதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் வாடகைக்கு அமர்த்தப்பட்டு யாழ். குடாநாட்டிற்கான உணவுப் பொருட்களையும் பயணிகளை

(6ம் பக்கம் பார்க்க)

## ★ புலிகளின் தாக்குதல்:
## செட்டிகுளத்தில் சிப்பாய் உயிரிழப்பு

[கொழும்பு)

வவுனியா செட்டிகுளம் பகுதியில் இராணுவ காவலரண் ஒன்றின் மீது நேற்றுக் காலை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் 6 இராணுவத்தினர் காயமடைந

[5ம பக்கம் பார்க்க]

## ★ இஸ்ரேலின் உதவியுடன்

# யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற மிகவிரைவில் படை நடவடிக்கை!

## - துரித ஏற்பாடு நடக்கிறது -

(கொழும்பு)

இஸ்ரேலின் உதவியுடன் யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவதற்கு அரசாங்கம் அடுத்த சில வாரங்களில் பெருமெடுப்பில் பாரிய ராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள திட்டமிட்டுவருகிறது. இதற்கான ஏற்பாடுகள் துரிதகெதியில் நடைபெற்று வருவதாக 'ராவய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்; இந்தப் போர் நடவடிக்கைக்காக அரசு இஸ்ரேலின் பூரண உதவி ஒத்தாசைகளைபெறத் திட்டமிட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளையும் ஏற்கனவே மேற்கொண்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து கடந்த சில வாரங்களாக தருவிக்கப்பட்ட பல கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான ராணுவ தளபாடங்

[5-ம் பக்கம் பார்க்க]

## புலிகளின் இரகசிய இடம் கொழும்பில் பிடிபட்டதாம்

(கொழும்பு)

கொழும்பு நகரில் செயற்பட்டுவந்த விடுதலைப் புலிகளின் இரகசிய இடத்தைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளதாக 'ஒப்சேவர்' பத்திரிகை தெரிவிதுள்ளது.

கடந்த வாரம் கைதான இளைஞர் கொடுத்த தகவலின்

(5ம் பக்கம் பார்க்க)

## 'பிரபா' விவகாரம் இலங்கை ஆராய்கிறது

(கொழும்பு)

ராஜீவ் கொலை வழக்கு சம்பந்தமாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனையும் மற்றும் அவரது உதவியாளர்கள் இருவரையும் ஒப்படைக்குமாறு இந்திய அரசாங்கம் விடுத்த வேண்டுகோளை தகுந்த அதிகாரிகளைக் கொண்டு பரிசீலனை செய்வதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

[5-ம் பக்கம் பார்க்க]

## ★ போருக்கு பெருமளவு நிதி தேவை:
## நிவாரணத் திட்டங்கள் பலவற்றை உடனடியாக நிறுத்த அரசு முடிவு!

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் யுத்தத்தைத் தொடர்ந்து நடாத்துவதற்காகப் பல நிவாரணத் திட்டங்களை நிறுத்த அரசு தீர்மானித்திருப்பதாக 'ஹிரு' பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்; பாரிஸ் மாநாட்டில் 85 கோடி டொலர் நிதியைப் பெற்றும் கூட, யுத்தத்திற்கு முகம் கொடுப்பதற்காக அரசாங்கம் இந்த நிவா

(5ம் பக்கம் பார்க்க)

## காலிப் பகுதியில் ஊரடங்கு தளர்வு

(காலி)

காலியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தமிழரின் கடைகள் தீக்கிரையாக்கப்பட்டதைத் தொடர்ந்து அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம், நேற்று சில மணி நேரம் தளர்த்தப்பட்டது.

நேற்று காலி நகரில் வீதி

(6ம பக்கம் பார்க்க)

## கொட்டும் மழையில் லண்டன் நகரில் ஆயிரக்கணக்கான தமிழர் பேரணி

(லண்டன்)

இலங்கை அரசுக்கு எதிராக நேற்று முன்தினம் லண்டன் மாநகரில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொட்டும் மழையிலும் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடாத்தியுள்ளனர்.

லண்டனில் புகழ்பெற்ற ஒக்ஸ்போட் சேக்கஸ் பகுதியிலுள்ள லண்டன் பிளேஸ் என்ற வீதியில் இருந்து ரெம்பிள்என்ற இடத்திற்கு ஊர்வலமாக ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைக்குழந்தைகள் சிறுவர் சகிதம் ஊர்வலமாகச் சென்றனர்.

ஊர்வலத்தின் முன்னே நூற்றுக்கணக்கான சிறுவர் சிறுமியர், ஐரோப்பிய ஒன்றி

(6-ம் பக்கம் பார்க்க)

## மலையகத்தில்
## பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்பு அதிகரிப்பு

(கண்டி)

மலையகத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்பு பெருமளவில் பலப்படுத்தப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக நேற்று அவிசாவளை பொலிஸ் நிலையத்தில் முக்கியகூட்டமொன்று நடைபெற்றுள்ளது. இக் கூட்டத்தில் மலையகத்தின் பல பகுதிகளையும் சேர்ந்த பல பொலிஸ் நிலைய அதிபர்கள் கலந்து கொண்டனர்.

மலையகத்தில் புலிகள் ஊடுருவியுள்ளதாக தகவல்கள் வெளிவருவதால் மலையகத்தில் பொலிஸ் நிலையங்கள் புலிகளின் தாக்குதல்களுக்குள்ளாகலாமெனஎச்சரிக்கப்பட்டுள்

(6ம் பக்கம் பார்க்க)

## 'இந்து'க்கள் மீது தாக்குதல்; 15-ம் திகதி யாழ். நகரில் பேரணி

[யாழ்ப்பாணம்)

இந்துக்களுக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொண்டு வரும் இராணுவ தாக்குதல்களை கண்டித்து எதிர்வரும் 15-ம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியை நடாதத இந்து சமயப் பேரவை தீர்மானித்துள்ளது.

நல்லை ஆதீனத்தில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இது குறித்து ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

[5ம் பக்கம் பார்க்க]

## இன்றும் நாளையும் படகு சேவை இல்லை

[யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் நடைபெறமாட்டாதென விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

சி

# சூழல் தினப் போட்டியில் பரிசு பெறுவோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவன சூழல் பாது காப்புப் பகுதியால நடாத் தப்பட்ட உலக சூழல் தினப் போட்டியில் பரிசு பெறுவோர் விபரம்;

கருத்துப் படம்

1ம் இடம்: தவநீதராசா பிரதீபன், யா/இந்துக் கல்லூரி.

2ம் இடம்: வடிவேல் ராஜன், மே/பா திருமலை, ராசா, இல: 971, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

3ம் இடம்: இ.மோகன ராஜ் குமார், மே/பா வி.கே. இரத்தினகுமார், அதிபர், உசன் மிருசுவில்.

4ம் இடம்: கே. ஏ. தம்பி ராசா, பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில்.

5ம் இடம்: க. ரட்ணேஸ் வரன். ஆசிரியர், மானிப்பாய் மெமோறியல் கல்லூரி.

கவிதை 1

1ம் இடம்: மா, சிதம்பர நாதன், தொலடூரம், சுழி புரம்.

2ம் இடம்: நாகலிங்சம் ருக்குமணிதேவி, ஐயனார் வீதி, பருத்தித்துறை.

3ம் இடம்: வ யோகானந்த சிவம், செந்தில் வாசா. வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.

4ம் இடம்: அ. அதிசய ராஜா, சகாயர் இல்லம், நவாலி தெற்கு, மானிப்பாய்.

5ம் இடம்: குணநாயகம் சிறீகணேஷ் விக்னேஸ்வரா வீதி, மலைவம்படி ஒழுங்கை, சுதுமலை கிழகசு, மானிப்பாய்.

கட்டுரை:

1-ம் பரிசு: சி. இரத்தினம், முருகன் கோவிலடி. புலோலி வடமேற்கு. புலோலி.

2-ம் பரிசு: சர்மிலா சண்முக லிங்கம், யா/யூனியன் கல்லூரி, மருதனுமடம். சுன்னுகம்.

3-ம் பரிசு: சந்திரன் சங்கர், கற்பகப் பிள்ளையார் கோவிலடி, உடுவில் கிழக்கு. சுன்னுகம்.

4-ம் பரிசு: முத்துக்கிறுப்பன் சுதாகரன், யா/வேலாயுதம் மகாவித்தியாலம், பருத்தித் துறை.

5-ம் பரிசு: ரேணுகா கிருஷ்ணன், எழுதுமட்டுவாள தெறகு. எழுதுமட்டுவாள்.

சிறுகதை

1ம் இடம்: இராமயணர் தவன், 50/36, செட்டித்தெரு, யாழ்ப்பாணம். 2ம் இடம்: திருமதி அற்புதராணி காசி லிங்கம், 435, சங்கீதா வீதி, திருநெல்வேலி. 3ம் இடம்: சர்மிலா சண்முகலிங்கம், யா/யூனியன் கல்லூரி மருதனு மடம், சுன்னுகம். 4ம் இடம்: ஐ. அசோக். 5ம் இடம்: பா. மேரிஜெசிந்தா, மே/பா சூ. பாவிலுபபிள்ளை, பூபதி பேக்கவஸ் வீதி, உயரப்புலம், ஆனைக்கோட்டை.

## 7ம் திகதி வரை முத்திரையிடலாம்

(கொழும்புத்துறை)

நிறுத்தல அளவை உபகரு ணங்களுக்கு முத்திரையிடும பணி சுழிபுரம் பகுதியில தற் பொழுது மேற்கொள்ளப் பட்டு வருகின்றது,

சுழிபுரம் பிரதேச சபைஅலு வலகத்தில் இம்மாதம் ஏழாம் திகதி வரை தினமும் காலை 8.30 மணி முதல் பிறபகல் 2மணிவரை முத்திரையிடும் பணி மேற்கொள்ளப்படுகிற தெனவும் அறிவிக்கப்பட்டுள் ளது. 154,கி

# 314 பேர் அங்கவீனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பிரிவில் 314 பேர் அங்கவீனமுற்று இருப்பதக பிரதேச செயலக புள்ளிவிபர கை நூலில இருந்து தெரிய வந்தது.

இதில் செவிப்புலன் அற் றோர் 36பேரும் விழிப்புலன் அற்றோர் 24 பேருமஉடல் வலுஅற்றோர் 168 பேரும் மனநோயாளர் 65 பேரும்மற் றும் பல குறைபாடு உடை யோர் 21 பேரும் பிரதேச செயலர் பிரிவில் உள்ளனர். 170-சி

## நூல்கள் கொள்வனவு

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவல கம், பிரமாண அடிப்படையி லான மூலதன நிதி ஒதுக்கீட்டு திட்டத்தின் கீழ் இப் பகுதிக ளில் இயங்கும் பிரதேச சபை யின் பொது நூலகங்களுக்கு புதியநூல்களை கொள்வனவு செய்வதற்காக 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள் ளது, -72

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995–06–05**

திங்கள் இரவு

8-02 தளிர்கள்- சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
8-20 சமகாலப் பார்வை
8-30 செய்திகள்
8-40 தரிசனம் ஒலியர் தயாவுடனுன செவ்வி

**1995–06–06**

செவ்வாய் காலை

7-02 மாவீர வணக்கம்
7-15 இவைறைய தாரகை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
7-40 தாயகப் பாடல்கள்

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995–06–05**

திங்கள் மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5-10 புதியவை
5-15 ஆழிடமுதம்
5-30 மாணவர் பக்கம்
6-00 சிந்தனைக்கு சில வினுடிகள்
6-02 நேயர் நெஞ்சம்
6-15 விளையாட்டுச்செய்திகள்
6 25 என் தெரிவு
6 30 நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

# ஓய்வுபெற்ற பிரிகேடியர்க்கு மேஜர் ஜெனரல் பதவிகள்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்திலி ருந்து ஓய்வுபெற்ற மேலும் இரு பிரிகேடியர்களுக்கு சிறி லங்கா அரசு மேஜர் ஜெனரல் பதவிகளை வழங்கவுள்ளது.

இவர்களுடன் ஓய்வுபெற்ற மொத்தம் 14 பிரிகேடியர்களை அரசு மேஜர் ஜெனரல் நிலைக ளுக்கு உயர்த்தவுள்ளது. ரி-இ

## 5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை

# விண்ணப்பங்களை 13-ம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டும்

(கொழும்பு)

5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பங் கள் தற்போது ஏற்றுக்கொள் ளப்படுவதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

விண்ணப்பங்கள் யாவும் இம் மாதம் 13ம் திகதிக்கு முன் னர் பாடசாலை அதிபர்களூ டாக பிரதேச கல்விப் பணிப பாளருக்கு அனுப்பிவைக்கப் படவேண்டும்.

இப்பரீட்சை இவ்வருடம் டிசம்பர் மாதம் நடைபெற வுள்ளது என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. க-இ

# யாழ். பிரதேசம் பற்றிய புள்ளி விபரக் கைநூல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் புள்ளிவிபரக் கைநூல் ஒன்றை வெளியிட் டுள்ளது;

யாழ். பிரதேச செயலக பகுதியின் சனத்தொகை, மீன்பிடித்துறை, பாடசாலை கள், கோவில்கள், குளங்கள், சனசமூகநிலையங்கள், சிறு கைத்தொழில் நிறுவனங்கள் போன்றவற்றின் விபரங்கள் இந்நூலில் தொகுத்து வெளி யிடபபட்டுள்ளன. 170-இ

# சித்த வைத்தியசாலைகளின் விபரம் திரட்டப்படுகிறது

(வேலணை)

யாழ் குடாநாட்டில் உள் ளூராட்சி சபைகளின் பரிபா லனத்துக்குட்பட்ட இலவச சித்த ஆயுள்வேத வைத்திய நிலையங்களின் தற்போதைய நிலைகுறித்து வட-கிழக்கு மாகாணசபை அறிக்கை யொன்றினைத் தயாரிக்கவுள் ளது.

தற்பொழுது யாழ்ப்பாணத் தில் தங்கியுள்ள வட-கிழக்கு மாகாண ஆயுளவேத பணிப் பாளர் மு. உரோமகேஸ்வ ரன் இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இது தொடர்பான கருத் தரங்கொன்று எதிர்வரும் 17ம் திகதி காலை 10 மணிக்கு யாழ். லங்கா சித்த ஆயுள் வேத மருத்துவக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும், இதில் கலந்து கொண்டு தங் கள் நிர்வாகத்துக்குட்பட்ட வைத்தியசாலைகளின் நிலைப ரம் பற்றிய அறிக்கையினைச் சமர்ப்பிக்குமாறும சித்த ஆயுள்வேத வைத்தியசாலைக ளின் பொறுப்பாளர்களும், பிரதேசசபை செயலாளர்க ளும் கேட்கப்பட்டுள்ளனர். 75-கி

# கால்நடைகளை கட்டிவளர்க்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நெருக்கடியான கால கட் டத்தில் உணவு உற்பத்தி மேம்பாட்டிற்காக பரவலாக மேற்கொள்ளப்படும் பயிர் களைப் பாதுகாக்க தங்கள் கால்நடைகளை கட்டிவளர்த்து ஒத்துழைக்குமாறு தமிழீழ பொருணமிய மேம்பாட்டு நிறுவனம் கோரிக்கை விடுத துள்ளது.

தற்போதைய போராட்ட சூழ்நிலையில் உள்நாட்டு உற் பத்திகளை அதிகரிக்கச் செய்வ தற்கான முயற்சிகள் நடை பெற்று வரும் இவ்வேளையில் விவசாயிகளால் செய்யப்படும் பயிர்கள் கட்டாக்காலி கால் நடைகளினுல் பாதிக்கப்படு வதை தடுக்க வேண்டியது அவசியமாகிறது.

எனவே தற்கால நிலை மையை உணர்ந்து உணவு உற்பத்திக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், கால்நடை களை கட்டி வளர்க்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.


## கோண்டாவில் தில்லையம்பதியில் (இன்று) மூன்றும் திருவிழா



சரணம்

மாமர நிழல் தனிலே வந்தே
வளர்த்த தாயே
தாமரைப் பாதமலர் தருவாய்
துணை நீயே!
சோம சுந்தரன் நடராஜன்
மனோஹரியே
ஆரணி பூரணியே ஆனந்த
பைரவியே
தில்லையம்பதியாளே சிவகாம
சுந்தரியே
தொல்லைகள் தீர்ப்பாயம்மா
தேவி

ஆக்கம்;
கவிமாமணி ந. வீரமணிஐயர்

இரவு 7-30 மணி:

சண்பகப் பூ பெற்ற சாபம்

என்னும் பொருள் பற்றி சிவநெறித் தொண்டன் செ. சதாசிவமூர்த்தி (ஆசிரியர்) சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

(ஏ-4971)



# தமிழீழ மாணவர் எழுச்சி நாள் யூன்-6

அறிவு எங்கள் பரம்பரைச் சொத்து
அழிக்க நினைப்பினும் செழிப்புறத் தளைப்போம்

மாணவர்களே எழுந்திடுவீர்கள் புதுயுகம் படைப்பீர்

R. D. X. விளையாட்டுக் கழகம்

(எ-4977)

**மணிவாக்கு**

கடினமான இதயத்தை உடையவன் கடவுளிடமிருந்து நீண்டதூரம் விலகி இருக்கிருன்.

— பிராங்லின்

## நமது நோக்கு

### உண்மை வெளிவரும்

சிறிலங்கா அரசினுல் விடுதலைப் புலிகள் மீது மூன்ரும் ஈழப் போர் திணிக்கப்பட்டபோது மேற்குலக நாடுகளும் கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளும் விடுதலைப் புலிகள் மீது அவவாதம் கூறி பேச்சுவார்த்தை மீளவும் ஆரம்பிக்க வேண்டுமென்று வலியுறுத்தின, இது ஒரு அரசுக்கு ஏனைய அரசுகள் சாதாரணமாக வக்காலத்து வாங்குவது போன்ற சம்பிரதாயம். ஆனுல் பேச்சுவார்த்தை ஆரம்பித்தது, பேச்சுவார்த்தையின் போது அரசு ஒத்துக்கொண்டதை நிறைவேற்ருது விட்டது, இழுத்தடித்தது. தூதுக்குழுவில் பொறுப்புவாய்ந்தவர்கள் பங்குபற்ருமை போன்றவை சகல நாடுகளுக்கும் தெரியும். எல்லா நாடுகளினதும் தூதரகங்கள் சிறிலங்காவில் உண்டு. அதுவுமல்லாமல் உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் கூட யாழ்ப்பாணம் வந்து நிலைமையை நேரில் கண்டவர்கள். தலைவர் பிரபாகரனுடனும் பேசுவதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அப்படி இருந்தும் சிறிலங்கா அரசை சமாதான விரும்பியாகவும் விடுதலைப் புலிகளை அதற்கு எதிரானவர்களென்றும் வெளி உலகுக்குக் காட்ட ஒருவித எத்தனிப்பு முயற்சிக்கப்பட்டது.

இந்த நிலையில் தான் அவுஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் இவான்ஸ் இரு பகுதியினருக்குமிடையில் சமாதானத்தை ஏற்படுத்தப்போவதாக கூறிக்கொண்டு சிறிலங்காவுக்கு வந்தார், வந்தபின்னர் அரசின் போக்கை அவதானித்து விட்டு தற்போது பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை இல்லைஎன்று கூறிவிட்டு மெல்ல நழுவி விட்டார்.

பின்னர் வந்த கனேடிய துணை அமைச்சரும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள அரசு ஆயத்தமாகி வருவதையும் புலிகளை அடக்கும் வரை பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு அரசுக்கு ஆர்வமில்லை என்பதையும் அறிந்து கொண்டார், அதுவுமல்லாமல் அதை பி. பி. ஸி. க்கும் கூறியுள்ளார். ஆனுல் பேச்சுவார்த்தை முலமே பிரச்னையைத்தீர்க்கலாம் என்று அவர் கூறியுள்ளது இங்கு கவனிக்கப்படவேண்டும். அது அரசு தான்பேச்சுவார்த்தையை தொடங்குவதற்குப் பின் நிற்கிறது என்பதையே சுட்டிக்காட்டுகிறது.

உண்மை மெல்ல மெல்ல வெளிவரத்தான் போகிறது. அப்போது வெளிநாடுகள் அழுத்தத்தை அரசுக்கு எதிராக பிரயோகிக்குமா என்பதே கேள்வி,

# நாளை தமிழீழ மாணவர் எழுச்சி நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படும்

(உடுவில்)

தமிழீழம் முழுவதும் நாளை ஜூன் ஆறும் திகதி செவ்வாய்க்கிழமை மாணவர் எழுச்சி நாள் தமிழீழ மாணவர்களால் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

பாடசாலைகள் தோறும் மாணர் எழுச்சி தினத்தை முன்னிட்டு பல விசேட நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மாணவர் அமைப்பினுல் இது சம்பந்தமான எழுச்சிப் பேரணியொன்று அன்றைய தினம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இப்பேரணியில் மாணவர் தம் உள எழுச்சியைச் சித்தரிக்கும் ஊர்திகள், மற்றும் சுலோக மட்டைகள் எடுத்துச் செல்லப்படவுள்ளன.

மாணவர் எழுச்சி தினமாகிய நாளை செவ்வாய்க்கிழமை காலை எட்டு மணிக்கு சகல பாடசாலைகளிலும் தமிழீழ தேசியக் கொடி ஏற்றி வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து பாடசாலைகளில் இதுதொடர்பான பலவேறு நிகழ்ச்சிகள் நடைபெறும்,

பிற்பகல் ஒன்றரை மணிக்கு யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி முன்றலிலிருந்து பேரணி ஊர்வலம் யாழ். பல்கலைக்கழக மைதானத்தை நோக்கி புறப்படும்.

பல்கலைக்கழக மைதானத்தில் மாலை 4 மணிக்கு பொதுக் கூட்டம் நடைபெறும்.

சென் ஜோன்ஸ் கல்லூரியில் இருந்து ஆரம்பமாகும் பேரணியில் ஒலிபெருக்கி வாகனம் முன்னே வர. தமிழரின் பாரம்பரிய மங்கள இசையான நாதஸ்வரம் தொடர, தமிழ் மரபுக்கமைய வேட்டி சால்வை அணிந்து மாணவர்களும் பெரியோர்களும் பின் தொடர்வர்.

தமிழ் தேசிய தலைவரின் உருவப்படம் தாங்கிய ஊர்தி முதலாவதாக புறப்படும்.

மாணவர் அமைப்பைச் சேர்ந்தோர் தொடர, பல பாடசாலை மாணவர்களின் பான்ட் இசைக் குழுவினர் ஊர்திகளின் இடையே இசை எழுப்பிச் செல்வர்.

ஊர்தி பல்கலைக்கழக மைதானத்தை சென்றடைந்ததும் அங்கு பொதுக்கூட்டம் நடைபெறும்.

### வாகன ஒழுங்கு

மாணவர் எழுச்சி தினத்துக்கு மாணவர்களை அழைத்துச் செல்வதற்கான வாகன ஒழுங்குகள் மாணவர் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வட்டச் செயலகத்தினருடன் பாடசாலை அதிபர்கள் தொடர்பு கொண்டு வாகன ஒழுங்கை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்

மாணவர்களை தத்தம் பாடசாலைகளிலிருந்து ஏற்றிச் செல்லும் வாகனங்கள் யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில் மீண்டும் அவர்களை அழைத்துச் செல்வதற்காக தரித்துநிற்கும்.

உடுவில் கல்விக் கோட்ட அதிபர்களை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் வட்ட செயலகத்துக்கு வந்து வாகன ஒழுங்குகளை செய்து கொள்ளுமாறு உடுவில் வட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. கபிலன் அறுவித்துள்ளார். -109-ரி

# தலைவர் பிரபாவை நாடு கடத்துவது இலங்கையால் முடியுமான செயலா?

(லண்டன்)

''ராஜீவ் காந்தி கொலை வழக்கு சம்பந்தமாக விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை இந்தியாவுக்கு வரவழைப்பது இந்தியாவைப் பொறுத்தளவில் அது ஒரு பெரிய விஷயம், ஆனுல் இலங்கையைப் பொறுத்தளவில் அது ஒரு பேச்சளவில் நடக்கின்ற விஷயமாகவே கருதப்படுகின்றது.'' இவ்வாறு பி.பி.ஸி தெரிவித்தது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கின் விசாரணையில் ஒருவித முன்னேற்றத்தை ஏற்படுத்தவே அமைச்சர் பா. சிதம்பரத்தின் அறிவிப்பு அமைகின்றது அத்துடன் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில், பிரதமர் ராவின் அரசு அக்கறை காட்டவில்லை என்று காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்துபோன அதிருப்தியாளர்களையும், ராஜீவ் காந்தியின் மனைவி சோனியாகாந்தியையும் திருப்திப்படுத்தும் முகமாகவும் இந்தியா தலைவர் பிரபாகரனை நாடுகடத்துமாறு இலங்கையிடம் கோரியுள்ளது.

கடந்த பத்து வருடங்களாக இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல்கள் நடைபெற்று வருகின்றது. இராணுவத்தால் இதுவரை விடுதலைப் புலிகளை வீழ்த்த முடியவில்லை அத்துடன் வடபகுதி விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. இந்த நிலையில் இலங்கை இராணுவத்தினுல் தலைவர் பிரபாகரனை கைது செய்ய முடியுமா? என்று பி பி. ஸி, கேள்வி எழுப்பியுள்ளது.

தலைவர் பிரபாவை ஒப்படைக்குமாறு இலங்கை அரசிடம் கோரியிருப்பது தற்போது நெருக்கடி நிலையிலிருக்கும் நரசிம்மராவ் அரசு காங்கிரஸ் அதிருப்தியாளர்களிடம் செல்வாக்குப் பெறுவதற்கே என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ராஜீவின் கொலை வழக்கில் நரசிம்மராவ் அரசு அக்கறையற்று இருப்பதாக காங்கிரஸ் அதிருப்தியாளர்களினுல் குற்றம் சாட்டப்பட்டு வந்தது.

இதனையடுத்து திருமதி சோனியா காந்தி பிரதமர் ராவ் மீதான தனது வெறுப்பை அவ்வப் போது காட்டி வந்ததும் குறிப்பிடத்தக்கது.

சோனியாவையும், காங்கிரஸ் அதிருப்தியாளர்களையும் திருப்திப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக தலைவர் பிரபாகரனை நாடுகடத்தக் கோரியிருப்பது அமைந்துள்ளது என்று அரசியல் பார்வையாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். வி-ரி

# காலி தீ வைப்பின் எதிரொலியாக தெற்கு தமிழரிடையே பெரும் அச்சம்

(கொழும்பு)

காலியில கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தீவைப்புச் சம்பவத்தை தொடர்ந்து தென்பகுதி தமிழர் மத்தியில் பெரும் அச்சநிலை ஏற்பட்டுள்ளது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிங்களக் காடையர்கள் காலியில் பெற்ருேல் நிலையமொன்றைக் கைப்பற்றி அங்கிருந்து பெற்ருேலை எடுத்து தமிழர்களின் கடைகளுக்கு தீவைத்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத் தீவைப்புச் சம்பவத்தில் தமிழர்களுக்கு சொந்தமான 22 கடைகள் சேதமடைந்துள்ளதுடன் அங்கிருந்து பல பொருட்களும் சிங்களவர்களால் கொள்ளையடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடும் மழை பெய்துகொண்டிருந்தபோதும் இக்கடைகளிலிருந்து பொருட்களை பலர் சூறையாடியதாக தெரிவிக்கப்படுகிறது.

மீண்டும் ஒரு இனக்கலவரத்தை ஏற்படுத்தும் நோக்குடனே இத் தீவைப்புச் சம்பவம் இடம்பெற்றது.

இத்தீவைப்புச் சம்பவத்தை தொடர்ந்து காலியில் வாழும் தமிழர்கள் பெரும் அச்சத்துடனும், பதற்றத்துடனும் காணப்படுவதாக அங்கிருந்து வரும தகவல தெரிவிக்கின்றன.

காலியில் இடம்பெற்ற இத் தீவைப்புச் சம்பவத்தின் எதிரொலியாக கொழும்பு மற்றும் தென்பகுதியில் வாழும் தமிழர்களுக்கிடையில் பெரும் அச்சநிலை தோன்றியுள்ளது,

காலியில் ராணுவம். பொலிஸ், கடற்படை போன்றவை பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளபோதிலும் தமிழர்கள் தத்தமது வீடுகளுக்கிள் முடங்கியிருப்பதாகவும் தெரிவிககப்படுகிறது.

காலியில் பல இடங்களிலுமுள்ள தமிழர்களுக்கு சொந்தமான வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருப்பதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. -ரி

## இலங்கை அரசு - புலிகள் மோதல்

# இந்தியாவின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாம்

(புதுடில்லி)

''இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் தொடர்ந்து நடைபெறும் மோதல்கள் இந்தியாவின் பாதுகாப்புக்கு பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது.''

இவ்வாறு பாரதீய ஜனதா கட்சியின் மக்களவையின் துணைத்தலைவர் ஐவர்சிங் கூறியுள்ளார். அவர் இதுபற்றி மேலும் தெரிவிககையில்; இலங்கையின் இனப்பிரச்னையினுல் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல்கள் தறபேது வலுவடைந்து வருகின்றது. இதனுல் இந்தியாவின் பாதுகாப்புக்கு பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது. இதை இந்திய அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் கூறினர்.

(வி ரி)

**சொட்டு நீரும் எமது சொத்தே**

# இராசி பலன்

0?-06-1995

திங்கட்கிழமை

[தமிழுககு வைகாசி 22]

ஸத்தமி முன்னிரவு 11-39 வரை, மகம் முன்னிரவு 9-01 வரை, மரணயோகம். ராகுகாலம் காலை 7-22 முதல் 8-52 வரை, சுப வேளை காலை 11-52 முதல் 1-22 வரை

மேஷம்: முயற்சி தாமதம், மனவேதனை, அதிகாரிகள் துயர்.

இடபம்: தொழில் முடக்கம், தைரிய குறைவு, கடன் படல்

மிதுனம்: காரியசித்தி, அயலவர் உதவி, கடமைஉணர்வு,

கடகம்: முதியவர் சிந்தை, பணமுடை, தவருன செய்கை.

சிங்கம்: தொழில் லாபம், மனக்களிப்பு, நண்பர் சகவாசம்.

கன்னி: மனப்போராட்டம், தந்தையின் கண்டிப்பு, அலைச்சல.

துலாம்: பயண அனுகூலம், புத்திரர் மகிழ்ச்சி, சுபச் செய்தி,

விருச்சிகம்: சுப விரயம், இனசன நன்மை. வாக்கு வசீகரம்.

தனுசு: தாழ்ந்தநிலை, அவசர முயற்சி, குடும்ப சங்கடம்.

மகாரம்: நோய் வாட்டும், குடும்ப வேற்றுமை, கடன் பகை.

கும்பம்: உறவினர்பெருமை, பொதுப்பணி, தெய்வ தரிசனம்.

மீனம்: தொழில் பெருமை, கலகலப்பு, மனநிறைவு.

— ஜோஸ்யர்

## பலதும் பத்தும்

### எப்படி வந்தது?

தொலைக்காட்சி எப்படி உருவானது... கண்டுபிடிக்கப்பட்டது தெரியுமோ! ஜோன் லோகி பெயர்ட் என்ற பொறியியல் விஞ்ஞானி பழைய இரும்புக கடையிலும், மது விற்பனை செய்யும் நிலையங்களிலும் சில பொருட்களை வாங்கிப் பரிசோதனைகள் நடத்திஞர்.

மரப்பெட்டிகள், வில்லைகள் ஒழுங்குசெய்து மின் ஆற்றல் மூலம் ஒளியையும் நிழற் படங்களையும் செலுத்த முயன்ருர், அப்போது... ஒரு அறையில் இருந்து ஒளிபரப்பிய பொம்மையின் உருவம் அடுத்த அறையின் திரையில் விழக் கண்டார்.

தற்செயலாக ஏற்பட்ட இந்த நிகழ்வால் மகிழ்ச்சியடைந்து... நண்டர்களை அழைத்து வந்து... ஒளி பரப்பும் விளக்குகளின் கீழ் அமரச் செய்து... அவர்களின் உருவங்களை ஒளி பரப்பி வெற்றிகண்டாராம்..,!

— மயூரன்

### இன்று உலக சூழல் தினம்

# சூழலைப்பேணி ஆரோக்கியத்தை வளர்ப்போம்

இன்று உலக சூழல் தினமாகும், வருடா வருடம் உலக சூழல் தினம் கொண்டாடப்பட்டபோதும், நாம் இருக்கும் பூமி மாசடைந்தபடியே போகிறது. இதனைத் தடுக்கும் நோக்கிலேதான் உலக சூழல் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. பூமியின் இயற்கை அமைப்பு சூழல் மாசுபடாமலிருக்க இருந்தபோதும்மனிதன் பல்வேறு வழிகளில் அதனை மாசுபடச் செய்கிறன்.

சூழலில் முக்கிய பங்காற்றுவது நிலம், நீர், காற்று ஆகியவையாகும். இந்த முக்கிய காரணிகள் மாசடையும் போதுதான் சூழல் மாசடைகிறது. இந்த மாசுபடும் சூழலினுல் உலகம் பல்வேறுநெருக்கடிகளை எதிர்நோக்குகின்றன. அதில்ஒன்றுதான் அண்மைக்காலமாக ஓசோன் படலத்தில் ஏற்பட்ட ஓட்டையும் அதனையொட்டிய அபாயமுமாகும்

முதலில் நிலத்தை எடுத்துக்கொண்டால் அது மாசுபட பல காரணிகள் உண்டு பசுந்தாள்பசளையை பாவித்த விவசாயிகள் உரப் பாவனையில் அதிக நாட்டம் கொண்டதாலும், அதனை அளவுக்கு அதிகமாக பாவிப்பதாலும் விவசாய நிலங்கள் பாழடைகின்றன அளவுக்கு அதிகமான கிருமிநாசினிகளை பிரயோகிப்பதனுல் இயற்கைச் சூழலில் அவசியம் வேண்டிய பூச்சி புழுக்கள் பூண்டோடு அழிக்கபபடுகின்றன.

நல்ல பயன்தரு தோட்ட நிலங்களில் வீடுகள், தொழிற்சாலைகள் கட்டப்படுவதனுல நல்ல விவசாய நிலங்கள் அற்றுப்போக நேரிடுகிறது உதாரணமாக யாழ் குடாநாட்டில் அரிதாக இருக்கும் செம்மண் நிலங்களில் இவ்வகையான செயற்பாடுகள் இடம் பெறுவதைக்காணலாம். கடலோர மண்ணை அள்ளுவதாலும்அபரிமிதமாக கடலோர தாவரங்கள் விறகுக்காக வெட்டப்படுவதாலும் மண் அரிப்புஏற்படுகிறது இவை யாவும் எங்கள் நிலம் மாசுபடுதலுக்கு ஏதுவாகிறது.

அடுத்ததாக நீர், இயற்கையாக மழை நீர் சுத்தமாக நிலத்தில் வீழ்ந்த போதும் ஆறு, குளம் கிணறுகளில் தேக்கப்படுகின்ற இடங்களில் அது மாசடைவதை காணலாம். அல்லது வீணடிக்கப்படுதலை காணலாம்.

வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்குடாவில் ஆறுகள் இல்லாதபோதும் மழை காலத்தில் நீரோடும் வாய்க்கால்கள் நீர் நிலைநிற்கும். குளங்களும் நிறைய உண்டு. இவை செவ்வனே பேணப்படாததால் பெய்யும் மழை நீர் அடிபட்டு கடலை சென்றடைகின்றன.

வளவுகளில் நீரை தேக்காததினுல் கிணறுகள் கோடை காலத்தில் வற்றிவிடுவதும் உவர்நீராவதும்சர்வ சாதாரணம்.

இன்னும் விவசாயிகள் 'வாட்டர் பம்' மூலம் ஒரே கிணற்றில்வற்ற வற்ற நீரை இறைப்

**கவிதாஸ்**

பதால் கிணறுகள் உவர் நீராகின்றன

மனிதனுக்கு உயிர் வாழ்வதற்கு முக்கிய காரணியாக விளங்குவது காற்று. சுற்றுச் சூழலில் இது அதி முக்கிய பங்காற்றுகிறது.

இந்தக் காற்றை மாசுபடாமல் காப்பாற்றுவது மரங்களாகும் காற்று-மரம் இரண்டும் ஒன்றையொன்று சூழலை தழுவி நிற்கின்றன.

இந்த நவீன யுகத்தில் தொழிற்சாலைகளால் வெளியேற்றப்படும் நச்சுவாயுக்கள், வாகனங்களினுல் வெளியிடப்படும் வேண்டத்தகாத வாயுக்கள், தூசுகள் இன்னும் இன்னேரன்ன வழிகளில காற்று மாசடைகிறது. இதனை சமச்சீர் செய்வது மரங்களாகும். மரஇலைகள் மனிதனுக்குவேண்டாத வாயுக்களை உள்ளெடுத்து மனிதனுக்கு அவசியமான பிராணவாயுவை வெளியிடுகின்றன, இதனுல் சூழல் சமச்சீரடைகிறது.

எனினும், வீடுகட்ட, தளபாடம் செய்ய, விறகுத் தேவையை நிறைவு செய்ய இன்னும் பல தேவைகளுக்கு மரங்கள் தறிக்கப்படுகின்றன.

காட்டை அழித்து நாட்டை விருத்தி செய்யும்போது இன்னெரு புறத்தில் பயன்தரு மரங்களைநாட்டி காடுவளர்க்க வேண்டுமென்பது விதிமுறை.

இதேபோல் தன்தன்தேவைக்கு மரங்களை தறிக்கும் போது இன்னெரு புறத்தில் மரங்கள் நாட்டி சமச்சீர்பேண வேண்டும். இந்தப் போர்கால சூழலில் யாழ். குடாவில் விறகுத் தட்டுப்பாடு ஏற்பட்ட பின், மரங்கள் தாறுமாறாக தறிக்கப்பட்டு விறகுக்குபாவிக்கப்படுகின்றன. நம் முன்னேர் நாட்டிய பயன்தரு மரங்கள் இந்த வேகத்தில் அழிக்கப்படுமானுல் யாழ்ப்பாணம் பாலைவனமாதல் வெகு தூரத்திலில்லை.

ஆகவே நிலம் பாதுகாக்கப்பட்டு, நீர்நிலைகள் பேணப்பட்டு, மரங்கள் நாட்டப்பட்டு சுற்றுச்சூழல் பேணப்பட்டாலே நாம் நல்ல சூழலில் வாழ்வதோடு நல்ல ஆரோக்கியத்தையும் பேணலாம்.

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் போர் சூழல் நிலவுகிறது பல தட்டுப்பாடுகளும், இடம் பெயர்வுகளும் சூழலை மாசு படுத்திவிட்டது

இந்நிலையில் உள்ளவளங்களை செவ்வனே பேணவேண்டியது அவசியம். முக்கியமாக நிழல் தரு மரங்களை தெருவெல்லாம் நாட்டுவோம் பயன்தரு மரங்களை வீடுகளிலும் பாடசாலைகளிலும் இன்னும் பல இடங்களிலும் நாட்டுவோம்.

இந்த முயற்சியில்இன்றைய சூழ்நிலையில் நிலம், நீர், மரம் பேணும் விதத்தில் நலன்விரும்பிகள், நலன்புரி நிலையங்கள், பிரதேச, நகர சபைகள், சனசமூக நிலையங்கள் முன்நின்று பாடுபடவேண்டும். அத்தோடு அவர்களின் செயற்பாடுகட்கு நம்மாலான பங்களிப்பைச்செய்து சுற்றுச்சூழலை பேணுவோமென இன்றைய தினத்திலிருந்து திடமெடுப்போமாக.

## தனிச் சிங்களத்தில் சுகாதாரப்பிரிவுச்சுற்றுநிருபம்

(பண்டத்தரிப்பு

கொழும்பிலுள்ள சுகாதார திணைக்கள தலைமை அலுவலகம் தரம் இரண்டு 'அ' தரத்திலுள்ள மருந்துக்கலவையாளர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சைக்கான சுற்று நிருபத்தை தனிச் சிங்களத்தில் அனுப்பி வைத்துள்ளது.

இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 5-ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கபபட வேண்டும் என்றும், பரீட்சை எதிர்வரும் ஜூலை மாதம் 9-ம் திகதியன்று கொழும்பிலும் மற்றும் தறிக்கப்பட்ட பகுதிகளிலும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடைபெறவுள்ளதாகவும் மேற்படி சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கான பாடவிதானம் விண்ணப்பப் படிவம் மற்றும் அறிவுறுத்தல்கள் யாவும் சிங்கள மொழியில் இருப்பதால் இதனைப் படித்து நன்கு புரிந்து கொள்ள முடியாதிருப்பதாக கவலை தெரிவிக்கபட்டுகின்றது. 72

## பஸ் விபத்தில் 24 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் உள்ள 'காஷ்மீர் பகுதியில் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்று பள்ளத்தில் வீழ்ந்ததில் குறைந்தது 24பேர் இறந்துள்ளனர் என அறிவிக்கபட்டுள்ளது.

இந்தியத் துருப்புக்கள் பஸ் மீது துப்பாக்கிச் சூடு நடத்தக் கூடும் என்ற அச்சத்தில் பஸ்ஸின்விளக்குகள் அணைக்கப்பட்டிருந்ததால் இவ்விபத்து ஏற்பட்டதென்று செய்திகள் தெரிவிக்கின்றன, ம

## சந்நிதி ஆலய சேதம் குறித்து அரசுக்கு எடுத்துரைப்பு

(யபழ்ப்பாணம்)

தொண்டமானுறு செல்வச் சந்நிதி ஆலயம் ஷெல் வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகி பலத்த சேதத்துக்குள்ளானது பற்றி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு எடுத்துக்கூறியுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்துக்களின் வணக்கத்துக்குரிய புனித ஸ்தலங்கள் படையினரால் தாக்கி அழிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டுமென்று கேட்டுள்ள அரச அதிபர் தொண்டமானுறு செல்வச் சந்நிதி ஆலய மணிக்கூட்டுக்கோபுரம் மற்றும் மடைப்பள்ளி போன்றவைகள் பலாலி இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலால் பலத்த சேதத்துக்குள்ளாகியிருப்பதால் இதற்காக அரசு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றும் கேட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. (162 கி)

## கட்டாக்காலி நாய்கள் பிடிக்கும் வேலை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர்ப் பகுதியில் கட்டாக்காலியாக வீதிகளில் திரியும் நாய்களை பிடிக்கும் முயற்சியில் யாழ் மாநகராட்சி மன்ற சுகாதார சேவைகள் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

கட்டாக்காலியாக வீதிகளில் திரியும் வளர்ப்பு நாய்களால் சுகாதாரத்துக்குப் பங்கம் விளைவிக்கப்படுகிறது. பொது மக்கள் இதனுல் பலவகையான பாதிப்புகளுக்குள்ளாகின்றனர்.

இதனை கட்டுப்படுத்துமுகமாக இந்நாய்கள் பிடிக்கும் வேலைகள் சுகாதாரப் பகுதியினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பிடிக்கப்படும் வளர்ப்பு நாய்களை மீளப் பெறுவதற்கு விரும்பும் நாய்களின் உரிமையாளர்கள் இந்நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசி போடப்பட்டதற்கான சான்றிதழ், நாய் வளர்ப்பதற்கு யாழ். மாநகராட்சி மன்றத்தால் வழங்கப்பட்டிருக்கும் சான்றிதழ் மற்றும் குற்றப்பணம் நூறு ரூபாவும் செலுத்துவதன் மூலம் நாய்களை மீளப்பெறலாம் இதனை நாய் பிடிபட்ட சிறிது நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 162 சி

## போசாக்குணவு விநியோகம்

(கொழுப்புத்துறை)

பச்சிலைப் பள்ளிப் பகுதியிலுள்ள பாலர் பாடசாலை மாணவர்களுக்கு தினசரி போசாக்குணவு வழங்கும் திட்டமொன்று தற்பொழுது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் அரசர் கேணி செந்தில்நகர் முகமாலை முகாவில் சமுத்திரன்குடியிருப்பு ஆகியபிரிவுகளிலுள்ள பாலர் பாடசாலை மாணவர்க்கு தற்பொழுது போசாக்குணவு வழங்கப்பட்டு வருகின்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் பளைப்பிரிவினர் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்தி வருகின்றனர். 154-சி

## புதிய ரூபா நோட்டுக்கள் இன்று முதல் புழக்கத்தில்

(கொழும்பு)

மூன்று புதிய ரூபா நோட்டுக்கள் இன்று திங்கட்கிழமை முதல் புழக்கத்திற்கு விடப்படும்.

50 ரூபா, 20 ரூபா, 10 ரூபா ஆகிய நோட்டுக்களே மத்திய வங்கியினுல் புழக்கத்திற்கு விடப்படவிருக்கின்றன.

ஜனுதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க. மத்திய வங்கி ஆளுநர் எச். பி. திஸாநாயக்கா ஆகியோரின் ஒப்பங்கள் இந்த நோட்டுக்களில் உள்ளன. -இ

## வலுவிழந்த ஐவருக்கு முச்சக்கர வண்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் வலது குறைந்தோருக்கு முச்சக்கர வண்டிகளை வழங்கவுள்ளது:

இதற்கென ஐந்து முச்சக்கர வண்டிகளை சமூக சேவைகள் திணைக்களம் யாழ் பிரதேச செயலகத்துக்கு விநியோகித்துள்ளது.

வலுஇழந்தோரில் ஐவர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு இம் முச்சக்கரவண்டிகள் வழங்கப்படவுள்ளது. 170-கி

## அகதிகள் புனர்வாழ்வு கழகம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல சேவைகள் செய்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ் பிரதேச செயலகப் பிரிவில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் கடந்த 1994ஆம் ஆண்டு பலசெயற்பாடுகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு செய்து கொடுத்துள்ளது.

தனி வீடுகளாக 8 வீடுகள் கட்டப்பட்டுள்ளதோடு 6வீடுகள் திருத்தி கொடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு பொம்மை வெளிகிராமத்தில் 38வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

உதவிக்கொடுப்பனவாக 99 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது, கல்விக் கொடுப்பனவாக 17 மாணவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வோர் நிதியிலிருந்து தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்,

சுயசார்புக் கடனுதவியாக 63 பேருக்கு 3, 56, 500 ரூபா வழங்கப்பட்டுள்ளது பொம்மை வெளிக் கிராமத்திலுள்ள ஆண்டு 1.6 வரையான 118 மாணவர்க்கு யுனிசெவ் கல்விப் பொதிகள் வழங்கப்பட்டன. 170.சி

## ப. நோ. கூ. சங்கங்கள் குமணவில் உணவுப் பொருட்களை எடுத்துவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள 23 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 'குமண' கப்பலில் உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் 1000 மெ.தொன் பொருள்களை கொண்டுவருவதற்கு கப்பலில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இம்முறை குமண கப்பலில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் உணவுப் பொருள்களை எடுத்துவரவுள்ளதால் யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவ சமாசம் குமணவில் உணவுப்பொருள்களை எடுத்து வரமாட்டது என்று சமாச தலைவர் தெரிவித்துள்ளார். [170 சி]

## யாழ் நகரில் இரவில் சென்றவரிடம் வழிப்பறிப்பு

(ஆனைப்பந்தி)

இரவு நேரததில் சென்றவரைத் தாக்கிப் பணம் பறித்துச் சென்ற சம்பவம் ஒன்று, அண்மையில் யாழ். நகரில் இடம் பெற்றுள்ளது.

ஐஸ்பழ வியாபாரியான செல்வம் என்பவர் இரவு நேரத்தில் வெலிங்டன் சந்தியை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது இவரை

[5ம் பக்கம் பார்க்க]

# இன்று

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று 5ம் திகதி திங்கட்கிழமை பிறபகல் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மைதானததில் நடைபெறவுள்ளது.

0 0 0

(யாழ்ப்பாணம்)

உலக சூழல் தினத்தை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இன்று பி. ப. 2-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் உலக சூழல் தொடர்பான கருத்தரங்கும், சூழல்தினத்தைஒட்டி நடாத்தபபட்ட கவிதை, கட்டுரை, சிறுகதை, ஓவியப் போட்டிகளில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான பரிசில் வழங்கலும், மற்றும் பட்டிமன்றம் போன்றனவும் நடைபெறவுள்ளது.

0 0 0

(உடுவில்)

உலக சுற்றுடல் தினத்தை முன்னிட்டு வலிகாமம் வடக்கு செயலர் பிரிவில் இன்று 5ம் திகதி பிரதேச செயலர் திரு. நா. வேதநாயகன் தலைமையில் பல சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

109

0 0 0

(மானிப்பாய்)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகமும் யாழ். மேற்கு பொருட்நிறுவனமும் இணைந்து நடாத்தும் சர்வதேச சூழல் பேண் தினமும், வதிவிட வேளாண்மை போட்டி பரிசளிப்பு விழாவும் இன்று பி. ப. 2 மணி முதல் வலி மேற்குபிரதேச செயலாளர் கா. சந்திரராசா தலைமையில் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (71)

0 0 0

(யாழ்ப்பாணம்)

வதிவிட வேளாண்மையை ஊக்குவிக்கும் நோக்கில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக்குழு பகுதியினால் நடாத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டியில் சங்கானை வட்டத்தில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசளிப்புவிழா இன்று 6ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்றத்தால் நடத்தப்படும் அனைத்து உலக சூழல் தினம்; இன்று 5ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நல்லூர் நாவலர் கலாச்சார மண்டபத்தில் யாழ். மாநகர ஆணையாளர் பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும். 170

0 0 0

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகமும் மருதனார்மடம் கோட்டக் கல்வி அலுவலகமும் இணைந்து நடாத்தும் சர்வதேச சூழல் பாதுகாப்பு தினம் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை பி.ப. 2-30 மணிக்கு வலி தெற்கு பிரதேச செயலர் ஆ மகாலிங்கம் தலைமையில் நடைபெறும்.

0 0 0

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகமும், யாழ். மேற்கு பொருட்நிறுவனமும் இணைந்து நடாத்தும் சர்வதேச சூழல் பேண் தினமும், வதிவிட வேளாண்மை போட்டி பரிசளிப்பு விழாவும் இன்று 5ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

-72-சி

0 0

(யாழ்ப்பாணம்)

மாணவர் அறிவியற் கழகத்தில் இன்று 5-ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு ஆண்டு-ஒன்பதுக்கான கணித செயன்முறை வகுப்பு சுட்டிகளும் ஆண்டு 10ற் கான விஞ்ஞான செயன்முறை வகுப்பு 'இதயம் வெட்டித் திறப்பும்' இடம் பெறும்.

பிற்பகல் 4 மணிக்குஆண்டு-11ற்கு கணித செயன்முறை வகுப்பு கூட்டல் தொடரும் பிற்பகல் 5 மணிக்கு ஆங்கில வகுப்பும் இடம்பெறும்.

# தமிழரின் கலை கலாசாரத்தில் சித்த மருத்துவம் ஓர் அங்கம்

## - துணைவேந்தர் உரை

(யாழ்ப்பாணம்)

சித்த மருத்துவத்துறை தமிழரின் கலை, கலாச்சாரம் போன்றவைகளின் ஒரு அங்கமென்று கூறலாம். அந்நியர் ஆதிக்கத்தால் எமது கலை, கலாசாரம், மொழி ஆகியன எவ்வளவுக்குத் தாக்கமடைந்திருக்கிறதோ அதேபோன்று எமது பாரம்பரிய சித்தமருத்துவத் துறையும் பின்தள்ளப்பட்டுள்ளது.

யாழ். மாநகராட்சி மன்ற கித்த மருத்துவப் பிரிவினரால் யாழ் மாநகராட்சி மன்ற வளவினுள் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்தமருத்துவ நிலையத் திறப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பேராசிரியர் குணரத்தினம் தொடர்ந்து உரையாற்றுகையில், சித்த மருத்துவத்துறை தமிழரின் பாரம்பரிய வைத்திய முறையாகும். எமது முன்னோர்கள் ஏடுகள் மூலம் எழுதி வைத்த சித்த மருத்துவக் குறிப்புகளில் இருந்து சித்த வைத்திய மருந்து வகைகளைக் கண்டு பிடிப்பதன் மூலம் எமது நோய்களுக்கான மருந்துத் தேவைகளை நாம் நிறைவு செய்ய வேண்டும்.

எமது முன்னோர் இப்போதைய புதிய நோய்கள் பற்றிய விபரங்கள் எதுவும் அப்போது தெரியாதிருந்தது. இந்த வகையான புதிய நோய்களுக்கு நாம் நவீன முறையில் ஆய்வுகளைச் செய்து வேண்டிய மருந்துவகைகளை உற்பத்தி செய்து கொள்ள வேண்டும்.

எமது பிரதேசத்தில் இன்று பொருளாதாரத் தடை இருக்கிறது. எமக்கு வேண்டிய போஷாக்கு நிறைந்த சத்துணவுப் பொருட்களை எடுத்து வருவதற்கு முடியாதிருக்கிறது. போஷாக்கு நிறைந்த சத்துணவு இல்லாத காரணத்தால் மக்கள் மத்தியில் பல வகையான புதிய நோய்த் தாக்கங்கள் அதிகரித்துள்ளன. மேற்கத்திய மருந்து வகைகளும் கிடைப்பது அரிதாக உள்ளது. இந்த வகையில் யாழ். மாநகராட்சி மன்றம் எடுத்துக்கொண்ட இந்த நல்ல முயற்சி எமது பாரம்பரிய வைத்திய முறையான சித்த வைத்தியத் துறையை இப் பிரதேசத்தில் விருத்தி செய்து கொள்வதுடன் மக்களின் வைத்திய தேவைகளையும் நிறைவுசெய்வதாக அமைகிறது.

யாழ். பல்கலைக் கழக சித்த மருத்துவப் பிரிவு இந்தவகையான முயற்சியில் தனது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறது. எமது மக்களிடம் சித்த மருத்துவ நம்பகத் தன்மையை மேலும் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார். -162-சி

## போருக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணங்களை நிறுத்தவுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.

தேசியப் பாதுகாப்பு நிதிக்கு அரச, தனியார்துறை ஊழியர்களிடம் தினமும் பெருமளவு நிதியைச் சேகரித்து வரும் அரசு, பல நிவாரணத் திட்டங்களை உடனடியாக நிறுத்தி, அப்பணத்தையும் போருக்கு முழு அளவில் செலவிடத் திட்டமிட்டுள்ளது

ஏற்கனவே அரசு 350 கோடி ரூபாவை யுத்தத்திற்கு மேலதிகமாக ஒதுக்கியிருந்ததும், பல அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்தியிருந்ததும் தெரிந்ததே. ம சி

## இஸ்ரேலின்

[1ம் பக்கத்தொடர்ச்சி]

களையும் ஆயுதங்களையும் இந்த யுத்தத்தில் பயன்படுத்த அரச படைகள் திட்டமிட்டுள்ளன.

ஏற்கனவே இலங்கை வந்துள்ள வெளிநாட்டு இராணுவ ஆலோசகர்களினதும் உடனடியாக சில நாடுகளிலிருந்து அழைக்கப்படவுள்ள ராணுவ ஆலோசகர்களினதும் முழு ஒத்துழைப்புடன் இந்த இராணுவ நடவடிக்கையை பெருமெடுப்பில் நடாத்தவும் அதன் மூலம் யாழ்ப்பாணத்தை கைப்பற்றவும் அரசு திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ம-சி

# தேரரின் மரணச் சடங்கில் இனவாதத்தை கிளப்பமுயற்சி

(கொழும்பு)

தற்போதைய சூழ்நிலையில் மக்கள் பொறுமையுடனும் விவேகத்துடனும் நடந்து கொள்ள வேண்டுமென்று மதத் தலைவர்களும் கல்விமான்களும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்,

இதேவேளை திம்புலாகல தேரரின் படுகொலைச் சம்பவத்தைபயன்படுத்திசிலதீயசக்திகள் குறுகிய அரசியல்லாபம் பெற முயற்சித்து வருவதாக தேரரின் மரணச் சடங்கு ஏற்பாட்டுக்குழு தெரிவிக்கின்றது.

காலஞ்சென்ற தேரரின் மரணச்சடங்கை தங்கள் குறிக்கோள்களை அடைவதற்குப் பயன்படுத்திக் கொள்ள இந்தச் சக்திகள் எத்தனித்திருக்கின்றன.

மரணச்சடங்கு ஏற்பாட்டுக் குழுவின் அங்கத்தவர்களில் ஒருவரான பிரதியமைச்சர் மைத்திரிபால சிறிசேன தகவல் தெரிவிக்கையில்:

மரணச் சடங்கு நிகழ்ச்சி நிரலின்படி ஆறுபேருக்கு மாத்திரமே இரங்கலுரை நிகழ்த்துவதற்கு இடமளிக்கப் பட்டிருந்தது. ஆனால் சில நபர்களின் பணிப்புரைக்கமைய இந்த நிகழ்ச்சி நிரல் மாற்றப்பட்டது.

இனவாதத்தைத் தூண்டுவதில்லையென மரணச்சடங்கு ஏற்பாட்டுக்குழு தீர்மானித்திருந்த போதிலும், இனவாத உணர்வுகளை தூண்டி விடுவதற்கு இதன்மூலம் சில நபர்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டது.

நிகழ்ச்சி நிரல் கடைசிநேரத்தில் மாற்றப்பட்டதன் காரணமாக குழப்பம் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றிருந்த ஆறுபேரைத் தவிர செ. ஜி. பி. நெல்சன், கலாநிதி ஜயலத் ஜயவர்த்தன, டபிள்யூ. ஜே. எம், லொக்கு பண்டார, ரட்ணசிறி ராஜபக்ஸ, ஹட்சன் பமரசிங்க, கலாநிதி ஹரிச்சந்திர விஜேதுங்க ஆகியோரும் அங்கு உரையாற்றினர்கள். இ

## புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ததாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் செயலகம் நேற்று தெரிவித்தது.

செட்டிகுளம் பகுதியிலிருந்து 10 கிலோமீற்றர் தொலைவில் உள்ள தாந்திரிமலைப்பகுதியில் விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை மேற்கொண்டதா. பாதுகாப்பு படைவட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளையில் மட்டக்களப்பு காத்தான்குடிப் பொலிஸ் நிலையம் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில். பொலிஸ் ஒருவர் காயமடைந்தார் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (க-சி)

## மருந்தாளர் பயிற்சிக்கு தெரிவு

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதார திணைக்கள பிரதி மாகாண பணிப்பாளர் பணிமனையில் எழுதுவினைஞர்களாக கடமையாற்றி வந்த இருவர் மருந்தாளர் (பாமசிஸ்ட்) பயிற்சி பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இரு வருடகாலம் மருந்தாளர் பயிற்சியை இவர்கள் பெறுவர். 72 கி

## யாழ்நகரில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வழிமறித்துத் தாக்கிய சிலர் இவரிடமிருந்த 2,400 ரூபா பணத்தைப் பறித்துச் சென்றுள்ளனர்.

அத்துடன் ஐஸ்பழ வியாபாரத்தின்போது பயன்படுத்தப்படும் மணியையும் வழிப்பறித் திருடர்கள் பறித்துக் கொண்டு சென்றுவிட்டதாகக் கூறப்படுகின்றது. 101

## இந்துக்கள் மீது

(1-ம்பக்கத் தொடர்ச்சி

நல்லை ஆதீனம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில்; கடந்த பல ஆண்டுகளாக இந்துக்களுக்கு எதிராக இந்த நாட்டில் நடைபெற்று வரும் அநீதிகளை கண்டித்து பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறவுள்ளது.

★ இந்துக் கோயில்கள் மீதான விமான, எறிகணைத் தாக்குதல்களை நிறுத்து.

★ வடக்கு -கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கையால் சேதமாக்கப்பட்ட 1000 இற்கும் மேற்பட்ட இந்துக்கோயில்களை உடனடியாகப் புனரமைக்க வேண்டும்.

★ சரித்திரப்பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வரம், உகந்தை முருகன் கோயில், கீரிமலை நகுலேஸ்வரன் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் ஆகியவற்றில் அமைக்கப்பட்ட இராணுவ முகாம்களை உடன் அகற்றி அக்கோயில்களை உடனடியாக வழிபாட்டிற்குத் திறந்துவிட வேண்டும்.

★ இந்துக்களின் புனித தீர்த்தமான கீரிமலையை அவர்களின் பாவனைக்கு திறந்து விடுக.

★ கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் உள்ள இந்துக் கோயில் நிலங்களை பறிமுதல் செய்வதை நிறுத்து.

★ இந்துக்கோயில்களுக்கு அருகாமையில் பௌத்த விகாரைகளை அமைத்து இரு மதங்களுக்குமிடையே பகைமையை வளர்ப்பதை நிறுத்து

இராணுவ நடவடிக்கைகளை உடனடியாகக் கைவிட்டு வட பகுதி மீதான நியாயமற்ற பொருளாதார போக்குவரத்துத் தடைகளை நீக்கி சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். சி

## புலிகளின் இரகசிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேரிலேயே. இந்த இடத்தைப் பொலிஸார் கண்டு பிடித்ததாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது,

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணின் பொறுப்பில் இருந்த அந்த இரகசிய இடத்திற்கு அந்த இளைஞர் சென்று கொண்டிருந்தபோது அவர் கைது செய்யப்பட்டாராம். விசாரணையின்போது அவர் பலாலியைச் சேர்ந்தவர் எனவும், இரண்டு லட்சம் ரூபா பணமும், 155 புகைப்படச் சுருள்களும் இவரிடம் இருந்ததாகவும பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் ரோந்து சென்ற பொலிஸாரிடம் பிடிபட்டபோது. தன்னிடமிருந்த சக்தி வாய்ந்த தொலைத் தொடர்புச் சாதனங்களை வீசி எறிந்துவிட்டுத் தப்பிச் சென்றவரே இவர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர். சி

## பிரபா விவகாரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பாக மேற்படி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையின் விபரம் வருமாறு; இத்தகைய வேண்டுகோள் சம்பந்தமாக இதற்கு ஆதாரமாக தரப்பட்டுள்ள விடயங்களை சட்டமா அதிபர் ஆராய்வது வழமையான நடைமுறை: இலங்கையின் குற்றவாளிகளை ஒப்படைப்பது என்பது திட்டவட்டமான நடைமுறைகளுக்கு அமைய இவ் வேண்டுகோள் இருக்கின்றதா என்பது குறித்து ஆராய்வது அவசியமாகும்.

இதன் பின்னர் குற்றவாளிகளை ஒப்படைக்கும் விடயத்திற்கு பொறுப்பாக இருக்கும் அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் கொழும்பு உயர் நீதி மன்றிற்கு குற்றவாளிகளை ஒப்படைக்கும் நடைமுறைகளை ஆரம்பிப்பதற்கு அதிகாரம் வழங்கலாமா என்பது குறித்து தீர்மானிப்பார்.

இலங்கையின் நாடு கடத்தி ஒப்படைக்கும் சட்டத்திற்கு இவ்விவகாரம் பொருந்துமா என்பதனை சட்டமா அதிபர் முதலில் பரிசீலனை செய்வார். பின்னர் தற்போதைய பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி சந்திரிகாவே இவ்விவகாரத்தை நீதிமன்றத்திடம் சமர்ப்பிப்பது குறித்து தீர்மானிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. க-சி

# மாஸ்கோ பல்கலையில் தீவிபத்து இலங்கை மாணவி கருகிப் பலி

(மாஸ்கோ)

ரஷ்யாவின் தலைநகர் மாஸ்கோவில் உள்ள பல்கலைக் கழகமொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி இலங்கையை சேர்ந்த சிங்கள மாணவி ஒருவர் கருகிப் பலியானார். இலங்கையை சேர்ந்த நான்கு மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

மாஸ்கோவின் தெற்குப் பகுதியில் உள்ள இந்த பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் இரவு மாணவர் தங்கும் விடுதிப் பகுதியில் பெரும தீவிபத்து ஏற்பட்டது. இத்தீவிபத்திலேயே அங்கு மருத்துவ பீடத்தில் கல்வி கற்கும் இலங்கை மாணவி ஒருவர் உட்பட நால்வர் கருகிப் பலியானார்கள், ஏனைய மூவரின் சடலங்கள் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.

அடையாளம் காணப்பட்ட இலங்கை மாணவியின் சடலத்தை இலங்கைக்கு அனுப்பும் முயற்சியை மாஸ்கோவிலுள்ள இலங்கைத் தூதரகம் மேற்கொண்டு வருகிறது' காயமடைந்த நாலு இலங்கை மாணவரின் பெயர்களும்இலங்கைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சி

# கிழக்கு காடுகளில் உக்கிர மோதல்

(திருமலை)

கிழக்கில் காட்டுப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான மோதல் உக்கிரமடைந்து வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த இரு வாரத்தில் கிழக்கில் நடைபெற்ற பல்வேறு தாக்குதல்களில் 50க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டும் 75க்கும் மேற்பட்ட படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

கிழக்கில் காடுகளில் விடுதலைப் புலிகளை தேடி அழிக்கும் நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கிழக்கில் காடுகளில் கடும் மோதல்கள் நடைபெறுவதாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்தனசி

# 'பிரபா'வை பிடிக்கும் வல்லமை இலங்கை அரசுக்கு உள்ளதா?

## - சாணக்க அமரதுங்க கேள்வி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனை இந்தியாவுக்கு அனுப்புவதல்ல பிரச்னை; அவரைப் பிடிக்க இலங்கை அரசுக்கு வல்லமை உள்ளதா என்பதே பிரச்னை என லிபரல் கட்சித் தலைவர் டாக்டர் சாணக்க அமரதுங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

திரு, பிரபாகரனை ஒப்படைக்குமாறு இந்திய அரசு இலங்கையிடம் கோரிக்கை விடுத்திருப்பது பற்றி பி. பி. ஸி. கேட்டபோது திரு. சாணக்க அமரதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

இது பற்றி புளொட் இயக்கத் தலைவர் திரு. சித்தார்த்தனிடம் கேட்டபோது; எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படக்கூடிய சமாதான முயற்சிகளுக்கு இது இடைஞ்சலாக இருக்கும். இலங்கையில நிரந்தரமானசமாதானம் தோன்ற வேண்டுமானல் விடுதலைப் புலிகள் இல்லாமல் அதனை ஏற்படுத்தமுடியாது என்பதை அனைவரும் உணரவேண்டும் எனவும் கூறினர். சி

## காங்கேசன் கடலில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும், தபாற்பொதிகளையும் மற்றும் பல பொருட்களையும் ஏற்றி இறக்கி வந்துள்ளது.

திருகோணமலைக்கு செல்வதற்காக இக்கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்திற்குள் நுழையும் தறுவாயில் துறைமுகத்திலிருந்து சுமார் ஒரு கடல் மைல் தூரத்தில் கடற்கண்ணி வெடியில் சிக்கி தகர்ந்துள்ளது.

இக்கப்பலில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி ஒருவரும் இந்தோனேசிய மாலுமிகள் 15 பேரையும் தவிர பயணி ஒருவர் மட்டுமே கப்பல் தகர்ந்த போது இருந்தார். அவர் யு. என். எச். சி. ஆரில் 'வயலர்ஸ்' இயக்குனராக இருந்து வருபவர். கப்பல் கடற்கண்ணி வெடியில் சிக்கி தகர்க்கப்பட்ட போதும் அனைவரையும் கடற்படையினர் மீட்டுள்ளனர்.

கப்பல் பணியாளரான இந்தோனேஸியா ஒருவர் காணமல் போய்விட்டார். கப்பல் சிப்பந்திகள் இருவர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நிச்சயமாக தற்செயலாக நடைபெற்ற ஒரு விபத்தாகும் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எப்போதும் தனது கப்பல் பயணப்பாதை பற்றி புலிகளுக்கு அறிவித்து வருவது வழக்கமாம். இந்நிலையில் இந்தச் சம்பவம் தற்செயலாக நடைபெற்றிருக்க வேண்டும் எனவும் இது ஒரு திட்டமிட்ட தாக்குதல் அல்ல எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தகர்க்கப்பட்டபோதும் கப்பல் மூழ்கவில்லை.

தற்போது இக்கப்பல் காங்கேசன்துறை துறை முகத்திலிருந்து ஒருமைல் தூரத்தில் நங்கூரம் பாச்சப்பட்ட நிலையில் நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

## தொழு நோய் பற்றிய நூல்வெளியீடு

[பண்டத்தரிப்பு]

'தொழுநோய்' பற்றிய சிறு நூல் ஒன்றை வலிகாமம் மேற்கு பிரதேசசெயலகத்தின் அனுசரணையுடன் சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையம் அண்மையில் வெளியிட்டுள்ளது.

சுழிபுரம் மேற்கு காட்டுப் புலம், வறுத்தோலை ஆகிய கிராமங்களில் இந்த நோயினுல் பலர் பாதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது: இந் நூல் இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது, -72

## மலையகத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளது. இதையடுத்தே நேற்று மலையக பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்பு குறித்தும் அவற்றின் பயதுகாப்பு பலப படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டது.

இதேவேளை மலையகத்தில் கடந்த சில மாதங்களாக தோட்டப் பகுதிகளில் தமிழ் இளைஞர்கள் நூற்றுக்கணக்கில் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே. சி

## யாழ். ஆஸ்பத்திரியில் தொற்று நீக்கும் பிரிவு வெகுவாகப் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனு வைத்தியசாலையில் டீசல் தட்டுப்பாடு காரணமாக மின்சாரம் மட்டுப்படுத்தி விநியோகிக்கப்படுவதால், வைத்தியசாலையின் அதிமுக்கிய சேவைகளில் ஒன்ருன தொற்று நீக்கும் செயற்பாடு வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இரவு நேரத்தில் இப்பிரிவுக்கு மின்சாரம் வழங்கப்படாததால், நேற்று முதல் இரவுச் சேவை ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. பகலிலும் இரண்டு மணித்தியாலங்கள் மட்டுமே இப்பிரிவுக்கு மின்சாரம் வழங்கப்படுவதால், குறிப்பிட்ட அந்த நேரத்தில் ஆஸ்பத்திரியின் தேவைக்குப் போதுமான உபகரணங்கள். பாவனைப் பொருட்களைத் தொற்று நீக்க முடியாதுள்ளது.

போதிய தொற்று நீக்கிய உபகரணங்கள் அற்ற நிலையில் ஆஸ்பத்திரி இயங்கவேண்டி உள்ளதால்,, நோயாளர் சேவையில் 50 வீதம் பாதிப்படையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (90-சி)

## சிவகுமாரன் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

தியாகி பொன் சிவகுமாரனின் 21ம் ஆண்டு நினைவு நாள் கூட்டம் இன்று திங்கள் மாலை 5-00 மணிக்கு உரும்பிராயிலுள்ள தியாகி பொன் சிவகுமாரனின் நினைவாலயத்தில் நடைபெறும்- சி

கொஞ்சம் ஏமாந்தால்
கொளுத்தத் தீ கொடுப்பவன் உளவாளி
அறிந்தவர் என்ருலும்
அவதானம் வேண்டும் !

## கொட்டும் மழையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யமே நீவழங்கும் ஆயுதங்கள் எங்களை கொல்கின்றன, என்ற அட்டைகளைத் தாங்கியவாறு சென்றனர். ஆண்கள் பெணகள் இளைஞர்கள் யுவதிகள் சிறுவர் சிறுமியர் எனகோஷங்களை எழுப்பியவாறே ஊர்வலமாக சென்றனர்.

சுதந்திரமும்' சமாதானமும் வேண்டு,ம்இலங்கை அரசின் ஆட்சி வேண்டாம், இலங்கைக்கான ஆயுத விநியோகத்தை தடைசெய், பொருளாதாரத்தடைகளை நீக்கு, இலங்கைக்கான உதவிகளை நிறுத்துங்கள். தமிழர்கள் நியாயமான அமைதியை தேடுகிருர்கள் இலங்கை அரசு நியாயமற்ற போர் தொடுக்கிறது; பிரிட்டன் இலங்கைக்கு வழங்கும் உதவியால் தமிழர்கள் இரத்தம் சிந்துகிருர்கள், இலங்கை அரசே அமைதிக்கு ஒர் வாய்ப்பைகொடு போன்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டக்காரர் மழையில் நனைந்தவாறு சென்றனர்.

பலர் புலிகள் தலைவர்பிரபாகரனின் படத்தையும்தாங்கிச் சென்றனர் ஊர்வல முடிவில் கூட்டமும் நடைபெற்றது. சி

## காலிப் பகுதியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எங்கும் படையினர் குவிக்கப்பட்டு தீவிர பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமைக்குப் பின் அங்கு அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறவில்லையாதலால், நேற்று காலியில் சில மணி நேரத்திற்கு ஊரடங்கு தளர்த்தப்பட்டது.

இதேவேளையில் காலியில் தொடர்ந்தும் பதற்றம் நிலவுவதால், ஊரடங்குச் சட்டம் அங்கு முற்ருக நீக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. சி

உலக சூழல் நாள்
ஜூன் - 5
வந்துவிட்டது பேணலுக்கான தருணம்
TIME TO PROTECT
"ஈஸ்வரி மரக்காலை"
காங்கேசன்துறை வீதி, மல்லாகம்.
[சி-1504]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு யூன் மாதம் 05ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News peper at General Post office Sri Lanka under Licence Number B / 1633613.